2017 மார்ச் 23]

விதிகளை வகுத்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2,000 குடும்ப அட்டைகளுக்குமேல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வாறு 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்களுக்குச் சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்களுக்கும் அரசுக் கட்டடமோ அல்லது தனியார் கட்டடமோ அமையும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அந்தக் கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு துறைரீதியாக விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

மும்முனை மின்சாரம்

***867—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, எண்ணமங்கலம் மற்றும் மைக்கேல்பாளையம் ஊராட்சிகளில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அந்தியூர் தொகுதி, எண்ணமங்கலம் மற்றும் மைக்கேல்பாளையம் ஊராட்சிப் பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த

பகுதியாக இருப்பதால் உயரழுத்த மின்சாரம் பயன்படுத்துகிற தொழிற்சாலைகளோ, நீரேற்று மின் நிலையங்களோ, மருத்துவமனைகளோ இல்லாததாலும், மின்பளு இல்லாததாலும், மும்முனை மின்சாரம் தேவைப்படுகின்றபொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் எங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கழக பொதுச் செயலாளர் தியாகத் திருவிளக்கு சின்னம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கழக துணைப் பொதுச் செயலாளர் மற்றும் எங்களுடைய முதலமைச்சர் ஆகியோரையும் வணங்குகிறேன். அந்தியூர் சட்டமன்றத் தொகுதி விவசாயம் நிறைந்த பகுதியாகும். நான் குறிப்பிட்ட எண்ணமங்கலம், மைக்கேல்பாளையம் ஊராட்சி என்பதைத் திருத்திக்கொண்டு எண்ணமங்கலம், வெள்ளித்திருப்பூர் மைக்கேல்பாளையம் feeders என்று மாற்றிக் கொண்டு, இந்த மூன்று feeder—களிலும் பல ஊராட்சிகள் அடங்கியிருக்கின்றன. குறிப்பாக வெள்ளித்திருப்பூர், மாத்தூர், எண்ணமங்கலம், பர்கூர் மைக்கேல்பாளையம், செங்கராபாளையம், கெட்டிசமுத்திரம் உள்ளிட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய feeder—கள்தான் எண்ணமங்கலம், வெள்ளித்திருப்பூர் மற்றும் மைக்கேல்பாளையம் feeder—கள். எனவே, விவசாயம் நிறைந்த இப்பகுதிகளுக்கு மும்முனை மின்சாரம் இருந்தால் மட்டுமே அவர்கள் முழுமையாக விவசாயம் செய்ய முடியும் என்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதல்படி நடந்துகொண்டிருக்கிற நல்லரசு இதில் விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு*

2017 மார்ச் 23]

மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதிகளுக்கு அந்தியூர் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதி என்பதால் மும்முனை மின்சாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பகலில் 6 மணிநேரம்; இரவில் 3 மணிநேரம் என ஒரு நாளைக்கு 9 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல், இப்போது மின்சாரம் தேவைக்கு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், கிட்டத்தட்ட 15, 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.*

முற்பகல் 10—20

ஒரு பகுதியிலே மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னால், உயரழுத்த மின்சாரம் தேவை இருக்கின்ற பட்சத்தில்தான் அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் வழங்க முடியும். அங்கே தொழிற்சாலைகளோ அல்லது நீரேற்று மின் நிலையங்களோ தேவையான அளவிற்கு இருந்தால்கூட, அதற்காக மின் பாதை அமைக்கின்றபொழுது மும்முனை மின்சாரம் வழங்க இயலும். அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் தேவைப்படுகின்ற மருத்துவமனை இல்லாத காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் மும்முனை மின்சாரம் வழங்கத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழித்தடத்தில் பர்கூர் மலைப் பகுதியும் உள்ளடங்கி இருக்கின்றது. பர்கூர் மலைப் பகுதியில் அரசு மருத்துவமனை—PHC உள்ளது; ஆலாம்பாளையத்திலும் அரசு மருத்துவமனை உள்ளது; எண்ணமங்கலத்திலும் அரசு மருத்துவமனை உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், விவசாயிகளின் நலன் கருதியும் அந்த இடத்தில் முழுமையாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனைச் செய்யும் என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், அந்தியூர் துணை மின் நிலையத்திலிருந்துதான் கடைக்கோடியிலுள்ள பர்கூர் ஊராட்சிக்கும் மின்சாரம் சென்று கொண்டிருக்கின்றது. அந்தக் கடைக்கோடிப் பகுதி என்பது கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மும்முனை மின்சாரம் வழங்கும்பட்சத்தில், அதாவது, எண்ணமங்கலம் feeder-க்கு உட்பட்ட ஒரு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால், அதன்மூலம் பர்கூர் வழித்தடத்திற்கும் சீரான மின்சாரம் கிடைக்கும். அந்த எண்ணமங்கலம் feeder ஐச் சுற்றியுள்ள மைக்கேல்பாளையம் feeder வெள்ளித்திருப்பூர், மாத்தூர், சங்கராபாளையம், கெட்டிசமுத்திரம் உள்ளடக்கிய ஊராட்சிப் பகுதிகளுக்கும் சீரான மின்சாரம் கிடைக்க வழிவகுக்கும் என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துணை மின் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. உயரழுத்த மின்சாரம் தேவைப்படுகின்ற அளவுக்கு அங்கு மருத்துவமனை இல்லையென்றுதான் சொன்னேன். மருத்துவமனையே இல்லையென்று சொல்லவில்லை. உயரழுத்த மின்சாரத்தைப் பெறுகின்ற அளவுக்கு அங்கே தனியார் மருத்துவமனையோ*

2017 மார்ச் 23]

அல்லது அரசு மருத்துவமனையோ இல்லாத காரணத்தினால், உயரழுத்த மின் அழுத்தம் இல்லை; மும்முனை மின்சாரம் வழங்கத் தேவையில்லை என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விட்டுவிட்டு இப்பொழுது துணை மின் நிலையம் கேட்கின்றார்கள். ஏற்கெனவே அந்தியூர் பகுதியிலிருந்து 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, எதிர்காலத்தில் தேவையிருப்பின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட நெய்யூர் பேரூராட்சியில் மிகப் பழமை வாய்ந்த நெய்யூர் மருத்துவமனை இருக்கிறது. அங்கு* International Cancer Centre*-ம் இருக்கின்றது. அந்தப் பகுதியில் மின்னழுத்தம் சரியாக இல்லை; மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் உதவியாக இருக்கும்.*

மேலும், என்னுடைய குளச்சல் நகராட்சிப் பகுதியிலே Ice Plants *இருக்கின்றன. அங்கு சீரான மின்சாரம் கிடைப்பதில்லை. அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சிப் பகுதியிலே சீரான மின்சாரம் இல்லையென்று சொல்கிறார்கள். நகராட்சிப் பகுதியிலே மும்முனை*

மின்சாரம்தான் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் மின் தேவை அதிகமாக இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

தார்ச் சாலையைச் சீரமைத்தல்

***2557—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தப்பட்டி கிராமத்திலிருந்து ரெங்கபாளையத்திற்கு வெங்கடாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தப்பட்டி கிராமம் முதல் ரெங்கபாளையம் வரை வெங்கடாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலை அமைக்கும் பணி 2016–2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.